**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 798/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 24.02.2026.**

| | |
|---|---|
| **Name : மகாலட்சுமி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது எருமைப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விபத்தில் அடிப்பட்டது என் கணவர் சௌந்தர்ராஜன் ஆவார். கடந்த 04.09.2024ம் தேதியன்று 04.20 மணிக்கு என் கணவர் இரு சக்கர வாகனமான TN 93 B 5927 Bajaj CT 100 இரு சக்கர வாகனத்தில் மேச்சேரியிலிருந்து தொப்பூர் சாலையில் ரைஸ் மில்லுக்கு எதிரே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற போது பின்னால் வந்த மாருதி ஈகோ கார் TN 29 CY 3757 அதன் ஓட்டுநர் வேகமாக ஓட்டி வந்து முன்னால் சென்ற என் கணவர் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது. தலை, வலது கணுக்கால், இடது புருவம், மூக்கு ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு தங்கவேல் மருத்துவமனைக்கு சென்றும், பிறகு மேல் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று இரவு 07.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்து போய் விட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். இது சம்மந்தமாக நான் காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் மனு அ.சா.ஆ.1** ஆகும். இந்த விபத்து கார் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்ததால் தான் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

2) ரவிசந்திரன் என்பவர் எனக்கு போன் மூலமாக தகவல் கொடுத்தார். நான் குஞ்சாண்டியூரில் உள்ள தங்கவேல் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். விபத்து நடந்தவுடன் போலீசாருக்கு யார் தகவல் சொன்னது என்றால் என் மச்சாண்டார் மகன் ராஜேந்திரன் விபத்து நடந்த அன்றே போலீசாருக்கு தகவல் தெரிவித்து விட்டார்.

3) நான் போலீசாரிடம் புகார் அளித்தேனா என்றால் நான் மருத்துவமனையில் இருந்ததால் அன்றே புகார் அளிக்கவில்லை. புகார் அளிக்க யார் யார் சென்றோம் என்றால் நான், பிரியங்கா ஜெயசுதா ஆகியோர் சென்றோம். புகாரை யார் தயாரித்தது என்றால் போலீசார் தயார் செய்தனர். அதில் நான் கையொப்பம் செய்தேன்.

4) எந்த போலீசார் தயார் செய்தனர் என்று எனக்கு தெரியுமா என்றால் மேச்சேரி போலீசார் தயார் செய்தனர் அவர் யார் என்ற விவரம் எனக்கு தற்போது நினைவில்லை. என் கணவர் எங்கிருந்து எங்கு வரும் போது விபத்து நடந்ததாக நான் கேள்விப்பட்டேன் என்றால் மேச்சேரியிலிருந்து தொப்பூர் வரும் போது விபத்து நடந்ததாக கேள்விப்பட்டேன். போலீசாரிடம் ரவி சந்திரன் ரைஸ் மில் எதிரில் விபத்து நடந்ததாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சாலையின் எந்த இடத்தில் விபத்து நடந்தது என்று கேள்விப்பட்டேனா என்றால் சாலையின் இடது பக்கமாக விபத்து நடந்ததாக கேள்விப்பட்டேன்.

5) நான் கேள்விப்பட்டது போல் கேள்விப்பட்ட விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் என் கணவர் தான் வாகனம் வருவதை பார்க்காமல் வலது புறமாக திரும்பியதால் அவர் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : C.C. 798/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 24.02.2026.**

| Name : ஜெயசுதா | Taluk : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Age : |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது சேலம் சென்ட்ரல் சட்ட கல்லூரி அருகே குடியிருந்து இளநிலை வழக்கறிஞராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் அடிப்பட்டது என் அப்பா சௌந்தர்ராஜன் ஆவார். கடந்த 04.09.2024ம் தேதியன்று 04.20 மணிக்கு என் அப்பா இரு சக்கர வாகனமான TN 93 B 5927 Bajaj CT 100 இரு சக்கர வாகனத்தில் மேச்சேரியிலிருந்து தொப்பூர் சாலையில் ரைஸ் மில்லுக்கு எதிரே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற போது பின்னால் வந்த மாருதி ஈகோ கார் TN 29 CY 3757 அதன் ஓட்டுநர் வேகமாக ஓட்டி வந்து முன்னால் சென்ற என் அப்பா இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது. தலை, வலது கணுக்கால், இடது புருவம், மூக்கு ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு தங்கவேல் மருத்துவமனைக்கு சென்றும், பிறகு மேல் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று இரவு 07.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்து போய் விட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். இது சம்மந்தமாக என் அம்மா காவல் நிலையம் சென்று புகார்மனு கொடுத்தார். இந்த விபத்து கார் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்ததால் தான் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) நான் வீட்டிலிருக்கும் போது என் தாயார் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். என் தாயாரும் வீட்டில் தான் இருந்தார். நான் சம்பவத்தை கேள்விப்பட்டு குஞ்சாண்டியூர் தங்கவேல் மருத்துவமனைக்கு சென்றோம். இந்த வழக்கு சம்மந்தமாக எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் மேட்டூர் அரசு மருத்துவமனை சவக்கிடங்கு அருகே வைத்து போலீசார் என்னை விசாரித்தனர்.

3) சாலையின் எந்த பக்கம் விபத்து ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன் என்றால் இடது பக்கம் ஏற்பட்டதாக தெரிந்து கொண்டேன். என் தந்தை மேச்சேரியிலிருந்து தொப்பூர் சென்றார் என்றால் ஆமாம். முன்னால் செல்லும் இரு சக்கர வாகனத்தின் மீது பின்னால் செல்லும் கார் அதிவேகமாக மோதும் போது இரு வாகனங்களுக்கும் எங்கெங்கு சேதம் ஏற்படும் என்றால் இரு சக்கர வாகனத்திற்கு பின்புறமும், காருக்கு முன்புறமும் சேதம் ஏற்படும்.

4) இந்த வழக்கில் இரு சக்கர வாகனத்திற்கு எந்த சேதமும் இல்லை என தெரிந்து கொண்டேனா என்றால் ஆமாம். இந்த விபத்தில் ஈடுபட்டதாக சொல்லப்படும் நான்கு சக்கர வாகனத்திற்கு எந்த சேதமும் இல்லை என மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் ஆமாம்.

5) நான் கேள்விப்பட்டு போல் கேள்விப்பட்ட விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் என் தந்தை தான் சாலையின் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்டது போல் சாலையின் இடது புறமாக விபத்து நடந்ததாக கேள்விப்பட்டது தவறு என்றும் போலீசார் சாலையின் வலது புறமாக விபத்து நடந்ததாக குறிப்பிட்டுள்ளனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

மறுவிசாரணை இல்லை.

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 798/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 24.02.2026.**

| | |
|---|---|
| **Name : செந்தில்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது எருமைப்பட்டியில் குடியிருந்து வழக்கறிஞராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் அடிப்பட்டது என் சித்தப்பா சௌந்தர்ராஜன் ஆவார். கடந்த 04.09.2024 ம் தேதியன்று 04.20 மணிக்கு என் சித்தப்பா இரு சக்கர வாகனமான TN 93 B 5927 Bajaj CT 100 இரு சக்கர வாகனத்தில் மேச்சேரியிலிருந்து தொப்பூர் சாலையில் ரைஸ் மில்லுக்கு எதிரே தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற போது பின்னால் வந்த மாருதி ஈகோ கார் TN 29 CY 3757 அதன் ஓட்டுநர் வேகமாக ஓட்டி வந்து முன்னால் சென்ற என் சித்தப்பா இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் விபத்து ஏற்பட்டது. தலை, வலது கணுக்கால், இடது புருவம், மூக்கு ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு தங்கவேல் மருத்துவமனைக்கு சென்றும், பிறகு மேல் சிகிச்சைக்காக மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று இரவு 07.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி இறந்து போய் விட்டார். பிரேத பரிசோதனையின் போது நான் உடனிருந்தேன். இந்த விபத்து கார் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்ததால் தான் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) விபத்து நடந்து மறுநாள் என்னை போலீசார் மேட்டூர் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். எங்கிருந்து எங்கு செல்லும் போது விபத்து நடந்ததாக கேள்விப்பட்டேன் என்றால் மேச்சேரியிலிருந்து தொப்பூர் செல்லும் சாலையில் உள்ள ரவி ரைஸ் மில் எதிரில் விபத்து நடந்ததாக கேள்விப்பட்டேன். சம்பவயிடம் சென்றேனா என்றால் சென்றேன். விபத்துக்குள்ளான இரு சக்கர வாகனத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். சேதம் குறித்து பார்த்தேனா என்றால் இல்லை.

நான் கேள்விப்பட்டு போல் கேள்விப்பட்ட விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும் என் தந்தை தான் சாலையின் குறுக்கே சென்று விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால் சரியல்ல. நான் கேள்விப்பட்டது போல் சாலையின் இடது புறமாக விபத்து நடந்ததாக கேள்விப்பட்டது தவறு என்றும் போலீசார் சாலையின் வலது புறமாக விபத்து நடந்ததாக குறிப்பிட்டுள்ளனர் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது.

ஒம்/– தே.மயில்சாமி

குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 798/2025**

**Prosecution witness : அ.சா. 4** **Date : 24.02.2026.**

| | |
|---|---|
| **Name : ரவிசந்திரன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் தற்போது எருமைப்பட்டியில் குடியிருந்து ரைஸ் மில் வைத்து நடத்தி வருகிறேன். விபத்தில் அடிப்பட்டது என் நண்பர் சௌந்தர்ராஜன் ஆவார். கடந்த 04.09.2024 ம் தேதியன்று 04.20 மணிக்கு என் நண்பர் இரு சக்கர வாகனமான Bajaj இரு சக்கர வாகனத்தில் மேச்சேரியிலிருந்து தொப்பூர் சாலையில் ரைஸ் மில்லுக்கு பக்கத்தில் சென்றார்.

2) நான் அப்போது ரைஸ் மில் முன்பாக நின்று கொண்டிருந்தேன். அந்த சமயத்தில் என் நண்பர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி சென்ற போது பின்னால் வந்த மாருதி ஈகோ கார் அதன் ஓட்டுநர் வேகமாக ஓட்டி வந்து முன்னால் சென்ற என் நண்பரின் இருசக்கர வாகனத்தின் இடது பக்கமாக மோதியதால் விபத்து ஏற்பட்டது. என் நண்பர் சம்பவ சமயத்தில் வளைந்து வரும் போது விபத்து ஏற்பட்டது. கார் ஓட்டுநரை பார்த்தேனா என்றால் இல்லை. ஆனால் அவருக்கும் காயம் ஏற்பட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

3) என் நண்பருக்கு இரண்டு கால், மூக்கு, தாடை ஆகிய பகுதியில் காயம் ஏற்பட்டு ஆம்புலன்ஸ் மூலமாக தங்கவேல் மருத்துவமனைக்கு சென்ற போது சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். பிறகு மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு பிரேதம் கொண்டு செல்லப்பட்டு சவகிடங்கில் வைக்கப்பட்டது. ஓட்டுநரை நான்

பார்க்கவில்லை. அதனால் அடையாளம் சொல்ல இயலவில்லை. இந்த விபத்து கார் ஓட்டுநர் அதிவேகமாக ஓட்டி வந்ததால் தான் நடந்தது. போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

2) இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் விபத்து நடந்ததற்கு மறுநாள் விசாரித்தனர். விபத்து நடந்து எவ்வளவு நேரம் கழித்து சென்றேன் என்றால் அடிப்பட்டவுடன் நான் சென்றுவிட்டேன். இரு சக்கர வாகனத்தின் எந்த பாகத்தில் நான்கு சக்கர வாகனத்தின் பாகம் மோதியது என்றால் இரு சக்கர வாகனத்தின் நடுபாகத்தில் நான்கு சக்கர வாகனத்தின் நடுபாகம் மோதியது.

3) என் நண்பர் என்னை பார்ப்பதற்காக இரு சக்கர வாகனத்தில் சாலையை கடக்கும் போது விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை விசாரித்த போதும் தற்போது சொன்னது போல் தான் சொன்னேன். போலீசார் விசாரித்த போது சாலையின் இடது புறம் விபத்து நடந்ததாக சொன்னேனா என்றால் இல்லை.

4) விபத்தில் ஈடுபட்ட இரண்டு வாகனங்களின் பதிவெண்ணும் நான் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். விபத்து நடந்தவுடன் யார் யாருக்கு தகவல் கொடுத்தேன் என்றால் புகார்தாரருக்கு தகவல் கொடுத்தேன். போலீசாருக்கு தகவல் கொடுத்தேனா என்றால் இல்லை. ரைஸ் மில் முன்பாக விபத்து சமயம் நான் தனியாக நின்று கொண்டிருந்தேன். பிரபு எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் விபத்து நடந்து 2 நிமிடம் கழித்து சம்பவயிடத்திற்கு வந்துவிட்டார்.

5) மகாலட்சுமிக்கு விபத்து எப்படி நடந்தது என்று சொன்னேனா என்றால் இல்லை. அ.சா.1 மகாலட்சுமியிடம் சாலையின் இடது புறமாக நான் விபத்து நடந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த இரு சக்கர வாகனத்திற்கு எங்கெங்கு சேதம் ஏற்பட்டது என்று நான் பார்த்தேனா என்றால் இல்லை. என்னை பார்ப்பதற்காக விபத்தில் இறந்தவர் இரு சக்கர வாகனத்தில்

சாலையை கடக்கவில்லை என்றால் விபத்து நடைபெற்றிருக்காது என்று சொன்னால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் விபத்தில் ஈடுபட்ட நான்கு சக்கர வாகனத்தின் ஓட்டுநரின் பெயர், ஊர், மற்ற விவரங்களை சொன்னேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும் விபத்தில் இறந்த நபர் என் நண்பர் என்பதால் நான் தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரடியாக பார்த்திருந்தால் சம்பவத்தில் ஈடுபட்ட நபர் மற்றும் வாகனத்தின் பதிவெண்ணை பார்த்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.